*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(2), 2020*

# மஸ்ஜிதுகளின் முன்னேற்றத்தில் ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் வகிபாகம்: ஏறாவூர் பிரதேசத்தை மையப்படுத்திய ஒரு கள ஆய்வு

**எம்.எல். முஹம்மட் ஹெல்பான்**
**சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்**
**பதவிஸ்ரீபுர, திருகோணமலை.**

**எஸ்.எம்.எம். மஸாஹிர்**
**இஸ்லாமியக் கற்கைகள் மற்றும் அறபு மொழி பீடம்**
**இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.**

Correspondence: mlhelfan@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

*மஸ்ஜிதுகள் என்பது இறைவனை வணங்குவதற்குரிய புனித இடங்களாக விளங்குவதோடு மாத்திரமல்லாமல் சமூக விவகாரங்களைப் பற்றிக் கரிசனை செலுத்தி, அதற்கான நலத்திட்டங்களை அமுல்படுத்துகின்ற மத்தியதளங்களாகவும் காணப்படுகின்றன. இத்தளங்களை அமைத்து அதனை சிறப்பாக முகாமைத்துவம் செய்வதனூடாக சமூக முன்னேற்றத்தை அடைய முடியும். இவ்வகையில் ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் பிரிவுகளில் ஒன்றான பள்ளிவாசல் குழுவின் இத்துறைசார் வகிபாகத்தை மதிப்பிடுதல் இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். பண்பு ரீதியில் அமைந்த இவ்வாய்வு சம்மேளன பள்ளிவாசல் குழுப் பிரதிநிதிகள் மற்றும் மஸ்ஜித் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் ஆகியோர்களிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டு, தகவல்கள் பெறப்பட்டதோடு, இது தொடர்பான ஆவணங்களும் இதற்காகப் பயன்படுத்தப்பட்டன. பள்ளிவாசல் குழுவிடம் மஸ்ஜிதுகளை முன்னேற்றம் செய்வதற்காக தரப்படுத்தப்பட்ட வருடாந்த திட்டம் மற்றும் அவற்றை கட்டம் கட்டமாக முன்னுரிமை அடிப்படையில் நடைமுறைப்படுத்து வதற்குரிய செயற்றிட்டம் இன்மையானது மஸ்ஜிதுகளின் முன்னேற்றத்தில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. பள்ளிவாசல் குழு உறுப்பினர்களின் இத்துறைசார் விடயங்களுடனான பங்காற்றுதல் முழுமையாக இடம்பெறாமையானது சவால்களை மேலும் அதிகரித்துள்ளது. மஸ்ஜித் நிருவாகிகளுக்கு இக்குழு கட்டளைகள் பிறப்பிப்பதை ஆய்வில் அவதானித்த போதிலும் அவற்றைப் பின்தொடர்வதிலும் முகாமைத்துவம் செய்வதிலும் இக்குழு பெற்ற வெற்றிக்கான சான்றுகளை கண்டறிய முடியவில்லை. இத்தகைய நிலைப்பாட்டினால் மஸ்ஜித் நிருவாகிகள் இக்குழுவின் வேண்டுதல்களுக்கு செயல்வடிவம் கொடுக்காமல் இருந்து வருகின்றமையை நேர்காணலின் மூலம் அறிய முடிந்தது. பள்ளிவாசல் குழுவின் பங்களிப்புக்கள் பூரணத்துவம் பெறாமையினால் மஸ்ஜித்களின் பௌதீக அபிவிருத்தி குறைந்துள்ளதோடு, ஆளணிகளின் முன்னேற்றங்களிலும் பாரிய சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் மஸ்ஜிதுகளினூடாக சமூகம் அடைய விரும்புகின்ற அரசியல், கல்வி, பொருளாதாரம், நீதி, சமத்துவம், இன நல்லிணக்கம் என்பன உரிய வகையில் செயலுருப்பெறவில்லை. மேலுள்ளவற்றைக் கருத்திற் கொண்டு, பள்ளிவாசல்களை அபிவிருத்தி செய்து பல துறைகளில் முன்னேற்றுவதனூடாக பல்துறைசார்ந்த சேவைகளை சமூகம் பெறுதற்கான வழிகாட்டல்கள் பற்றிய முன்மொழிவுகளைத் தருவதாகவும், எதிர்காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.*

**பிரதான சொற்கள்:** *மஸ்ஜித்கள், பள்ளிவாசல்கள் சம்மேளனம், வகிபாகம், பங்களிப்புகள், ஏறாவூர்*

## 1. அறிமுகம்

மனித வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த ஒன்றாக மஸ்ஜித்கள் காணப்படுகின்றன. இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலாக இறைவனை வணங்குவதற்காக நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜிதுல் ஹராம் (க.்.பதுல்லாஹ்) அதனை தொடர்ந்து அமைக்கப்பட்ட மஸ்ஜிதுல் அக்ஸா, மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜிதுல் குபா என்பன உலகளாவிய ரீதியில் பிரபல்யமடைந்துள்ளதோடு வருடாந்தம் மனித சமூகத்தை ஒன்றிணைக்கின்ற பாலமாகவும் அவைகள் விளங்குகின்றன. அவற்றினூடாக சமூகம் பெற்ற அடைவுகளை ஸஹாபாக்களின் வரலாறு துல்லியமாக எடுத்துக் காண்பிக்கின்றன. இம்மஸ்ஜிதுகளின் முன்னேற்றத்தில் அவர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

உபைதுல்லாஹ் அல் கவ்லானி அறிவிக்கின்றார். உஸ்மான் (ரழி) அவர்கள் பள்ளிவாசலை விஸ்தீரணப்படுத்தியபோது "நீங்கள் மிகவும் விரிவுபடுத்தி விட்டீர்கள்'' என்று மக்கள் அவர்களிடம் ஆட்சேபனை தெரிவித்தார்கள். அதற்கு "அல்லாஹ்வின் திருமுகத்தை நாடி, பள்ளிவாசல் ஒன்றைக் கட்டியவருக்காக அது போன்ற ஒன்றை அல்லாஹ் சுவர்க்கத்தில் கட்டுகின்றான்'' என்று நபி (ஸல்) கூற செவியுற்றுள்ளேன் என உஸ்மான் (ரழி) கூறினார் (புகாரி: 450). மேற்போந்த ஹதீஸுக்கு உருவம் கொடுத்தவர்களாக ஸஹாபாக்கள் திகழ்ந்தார்கள். அதனூடாக மனித சமூகம் இணைக்கப்பட்டதோடு முஸ்லிம்களின் நாகரிகம் பாதுகாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டது.

மேலும் மஸ்ஜிதுகளை பராமரிக்கக் கூடியவர்கள் எவ்வாறான தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை பின்வரும் அல்குர்ஆன் வசனம் விபரிக்கின்றது. ''அல்லாஹ்வின் மஸ்ஜிதுகளைப் பரிபாலனம் செய்யக்கூடியவர்கள், அல்லாஹ்வின் மீதும் இறுதிநாள் மீதும் ஈமான் கொண்டு, தொழுகையைக் கடைப்பிடித்து, ஸகாத்தை (முறையாகக்) கொடுத்து, அல்லாஹ்வைத் தவிர வேறெதற்கும் அஞ்சாதவர்கள்தாம் - இத்தகையவர்கள்தாம் நிச்சயமாக நேர்வழி பெற்றவர்களில் ஆவார்கள்'' (அல்குர்ஆன் 9:18).

மேற்படி இறைவசனத்திற்கு அமைய ஸஹாபாக்களால் உயிரோட்டமிக்க மஸ்ஜித்கள் உருவாக்கப் பட்டதன் விளைவாக மஸ்ஜிதுகள் கல்விக்கூடங்களாக பரிணமித்தன. அவற்றினூடாக கல்வியில் பாரிய வளர்ச்சி ஏற்பட்டு, ஆன்மீக அறிவோடு கூடிய கல்விமான்கள் உருவானார்கள். மேலும் மஸ்ஜிதுகள் வைத்திய நிலையங்களாகவும், நீதிமன்றங்களாகவும், ஆலோசனை நிலையங்களாகவும், வெளிநாட்டுத் தூதரகங்களாகவும் ஒரே குடையின் கீழ் இயங்கி சமூகத்திற்கு வழிகாட்டியது (மஸாஹிர், 2015).

இலங்கை ஒரு பல்லின நாடு என்றவகையிலும் பெரும்பான்மை சமூகமாக பௌதர்கள் வாழ்ந்த போதிலும் முஸ்லிம்கள் தமக்கான மஸ்ஜிதுகளை அமைப்பதில் மன்னர் ஆட்சி தொடக்கம் இன்று வரை உள்ள அரசாங்கங்கள் ஆதரவு கொடுத்தே வந்துள்ளன. இதனால் இலங்கையின் பல பாகங்களிலும் மஸ்ஜிதுகள் அமைக்கப்பட்டு, வணக்க வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 4500க்கு மேற்பட்ட மஸ்ஜித்கள் நாடளாவிய ரீதியில் இயங்குவதானது முஸ்லிம்களுக்கும் ஆட்சியாளர்களுக்குமிடையில் உள்ள இணைப்பை வெளிக்கொணருகின்றது.

இலங்கையிலுள்ள மஸ்ஜிதுகளை நிர்மாணித்து முன்னேற்றுவதில் முஸ்லிம் சமூகத்தின் ஒரு சில அரசியல் தலைமைகளின் பங்கு இருப்பதோடு தனவந்தர்களின் வகிபாகம் நேரடியாகவும் மறைமுகமாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் மஸ்ஜிதை மையப்படுத்தி ஒரு பிரதேசத்தை ஆன்மீக ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் கட்டியெழுப்புவதை இலக்காகக் கொண்டு உருவாக்கப்பட்ட (Masjid based Education Economic Development Society - MEEDS) இந்நிறுவனத்தின் பங்களிப்பும் இதில் அளப்பரியதாகும். மஸ்ஜிதை மையப்படுத்தி பிரதேசங்களை ஆன்மீக ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் கட்டியெழுப்புவதும் நிறுவன ரீதியான அனைத்து பங்கேற்பாளர்களையும் உள்ளடக்கிய விஞ்ஞான ரீதியாக அபிவிருத்தியை நிலைநிறுத்துவதும் இதன் பிரதான இலக்காகும். சுமார் 200க்கு மேற்பட்ட மஸ்ஜித் பரிபாலன சபையினர்களுக்கு பயிற்சி அளித்தல், வழிகாட்டல் போன்றவற்றை இது செய்து வருகின்றது. மேலும் மஸ்ஜித் முகாமைத்துவம் மற்றும் மைய சமூக மேன்பாடு போன்ற இரு

நூல்களையும் வெளியிட்டு இத்துறைக்கு பங்காற்றுகின்றது. மேலும் கொழும்பு அப்ரார் பள்ளிவாசல் அனைத்துத் துறைகளிலும் உள்ளடக்கிய முன்மாதிரியான மஸ்ஜிதாக திகழ்வது ஏனைய பள்ளிவாசல்களுக்கு வழிகாட்டியாக அமையவல்லது.

அந்தவகையில், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள முஸ்லிம் நகரங்களில் ஒன்றாக ஏறாவூர் விளங்குகின்றது. முஸ்லிம்கள் பெரும்பான்மையாக செறிந்து வாழுகின்ற இப்பகுதியில் பழமை வாய்ந்த மஸ்ஜிதுகளும் காணப்படுகின்றன. குறிப்பாக இலங்கை அரச வர்த்தமாணியில் 400 வருடங்கள் பழமை வாய்ந்த மஸ்ஜித் ஒன்றும் சமூகத்திற்கு வெளிக்கொண்டு வரப்பட்டதும் இப்பகுதியிலேயாகும். இவ்வாறான பின்னணியில் பண்டைக் காலம் தொட்டு மஸ்ஜித்களுக்கும் இங்குள்ள மக்களுக்குமிடையிலான உறவு தொன்மையானதாகும். குறிப்பாக ஏறாவூரில் 35 மஸ்ஜிதுகள் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இங்கு மஸ்ஜிதுகள் அதிகமாகக் காணப்பட்ட போதிலும் சரியான முகாமைத்துவத்துக்குள் மஸ்ஜிதுகள் உள்ளீர்க்கப்படாமையின் யதார்த்தத்தை இங்குள்ள மக்களின் பொது வாழ்வியல் அம்சங்களினூடாகப் புரிய முடிகின்றது.

இம்மஸ்ஜிதுகளின் தாய் சபையாக ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் விளங்குகின்றது. இச்சம்மேளனம் மூன்று குழுக்களைக் கொண்டு இயங்குகின்றது. கல்விக்குழு, இளைஞர் விவகாரக் குழு மற்றும் பள்ளிவாசல் குழு என்பன அவைகளாகும். இதில் பள்ளிவாசல் குழுவானது மஸ்ஜிதுகளின் அனைத்து விடயங்களுக்கும் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. ஆகவேதான் மஸ்ஜிதுகளை முறையாக முகாமைத்துவம் செய்வதிலும் மஸ்ஜித் ஊடாக சமூக விருத்திக்கான முனைவுகளை ஏற்படுத்துவதிலும் இப்பள்ளிவாசல் குழுவின் வகிபாகம் எவ்வாறு உள்ளது என்பதை தேடுவதாகவும் அதனை மதிப்பிடுவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

## 2. ஆய்வு முறையியல்

பண்பு ரீதியிலான முறையில் அமைந்த இவ்வாய்வு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளை மையப்படுத்தியதாகும். மஸ்ஜிதுகளின் முன்னேற்றத்தில் ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் பள்ளிவாசல் குழுவின் வகிபாகம் தொடர்பாக அதன் உறுப்பினர்கள் 15 பேரிடமும் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் 15 பேரிடம் பள்ளிவாசல் குழுவின் செயற்பாடு தொடர்பாக நேர்காணல் மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தை நிறுவுவதற்காக வேண்டி இரண்டாம் நிலைத்தரவுகளான புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், அறிக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிடைக்கப் பெற்ற தகவல்கள் coding முறையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டு, விரிதாள் மூலம் விளக்கங்களும் வரைபடங்களும் தயார்படுத்தப்பட்டுள்ளன.

## 3. கலந்துரையாடலும் கண்டறிதல்களும்


ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் பள்ளிவாசல் குழு உறுப்பினர்களாக துறைசார்ந்தவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. மார்க்க அறிஞர்கள், அரச அதிகாரிகள், தனவந்தர்கள் என அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இவ்வகுப்பினர்களின் எண்ணிக்கையும் சமமாக உள்ளமை விசேட அம்சமாகும். இவ்வுறுப்பினர்கள் அனைவரும் 35 வயது தொடக்கம் 64 வயதுக்குட்பட்டவர்களாக உள்ளார்கள். 15 பேர் கொண்ட நிருவாக சபையில் இருவர் முறையே தலைவர், செயலாளராக கடமை வகிப்பதோடு, ஏனைய 13 பேரும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சிறந்ததோர் முகாமைத்துவ வழிகாட்டலூடாக மஸ்ஜிதுகளின் முன்னேற்றத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியும். அதற்கான பயிற்சியும் தந்திரோபாயங்களும் உரியவர்களுக்கு வழங்கப்படுதல்

வேண்டும். ஆனால் ஆய்வாளர்களுக்குக் கிடைத்த தகவல்களுக்கமைய பள்ளிவாசல் குழுவிற்கு இவை முறையாக கிடைக்கவில்லை. இதனால் இது மஸ்ஜிதுகளின் முன்னேற்றத்தில் தாக்கத்தையும் பின்னடைவை ஏற்படுத்துகின்ற காரணிகளில் ஒன்றாக மாறியுள்ளன.

ஆய்வாளர்கள் இக்குழுவின் காரியதரிசியிடம் நேரடியாக கலந்துரையாடிய வகையிலும் ஆவணங்களைப் பரிசீலனை செய்த வகையிலும் மஸ்ஜிதுகளை முன்னேற்றுவதற்கான திட்டங்கள் கோர்வை செய்யப்பட்டு (வருடாந்த திட்டம்) எழுத்துருப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அத்திட்டங்களை கட்டம் கட்டமாக முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைத் திட்டத்தையும் எமது இத்தேடலில் கண்டுகொள்ள முடியவில்லை. எனினும் பள்ளிவாசல் குழு உறுப்பினர்களின் மாதாந்த ஒன்று கூடல்களில் சில விடயங்கள் கலந்துரையாடப்படுகின்றமை எமது ஆய்வில் அவதானிக்கப்பட்டன. அவ்வாறு கலந்துரையாடப்பட்ட விடயங்கள் செயல்வடிவம் பெற்றதை மஸ்ஜிதுகளினூடாக கண்டுகொள்ள முடியவில்லை.

வேதனமின்றி, சமூகசேவை நோக்கத்தைக் கொண்டமைந்த தனியார் அமைப்பு என்றவகையிலும் எவருக்கும் பொறுப்புக் கூறுவதற்குக் கடமைப்படாத நிலைப்பாடு காணப்படுவதாலும் பள்ளிவாசல் குழுவின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்கின்ற உறுப்பினர்களின் வரவு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. மேலும் பள்ளிக்குழு உறுப்பினர்கள் பெரும்பாலானோருக்குப் பொருத்தமாக அமைகின்ற நேரத்தை கருத்தில் கொள்ளாமையும் இவ்வரவு குறைவிற்கான காரணங்களில் ஒன்றாக இருப்பதையும் அறியமுடிந்தது. கடந்த ஐந்து கூட்டங்களில் கலந்து கொண்டவர்களின் வரவு 50% வீதத்தைக் கூட எட்டவில்லை. இது மஸ்ஜித்களின் முன்னேற்றத்தில் தீர்க்கமான முடிவை எட்டுவதில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. இதனைப் பின்வரும் வரைபடம் சான்றுப்படுத்துகின்றது.




(வரைபடம் - 01 மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள்)

மஸ்ஜித்களின் நிருவாகத் தெரிவிற்கு முன்னர் சிறந்த நிருவாகிகளை தெரிவு செய்வதன் அவசியம் பற்றி பொது மக்களுக்கு தெளிவுபடுத்தப்படல் வேண்டும். அவ்வாறு இடம்பெறுகின்ற போது பொது மக்களிலிருந்து சிறந்த நிருவாகிகள் தெரிவு செய்யப்படுவார்கள். இத்தகைய நிலை ஏறாவூரில் உள்ளதா என ஆய்வாளர்கள் தேடிய போது அவ்வாறான விடயங்களை கண்டு கொள்ள முடியவில்லை. அதேநேரத்தில் இப்பள்ளிக்குழு இதற்காக முன்னின்று உழைத்ததற்கான சான்றுகளையும் காண முடியவில்லை. மஸ்ஜித் நிருவாகிகளின் காலம் எப்போது முடிவடைகின்றது என்ற விபரம்

இக்குழுவிற்கு முறையாக சென்றடையாமையும் ஒரு முக்கிய காரணமாக அடையாளங் காணப்பட்டுள்ளது. பள்ளிவாசல் குழுவை பழைய நிருவாகிகள் புதிய நிருவாகத் தெரிவுக்கு அழைத்தால் மாத்திரமே கலந்து கொள்ளக்கூடிய நிலை காணப்படுவதையும் அவதானிக்க முடிந்தது. மேலும் கள விஜயங்கள் மேற்கொண்டு, மஸ்ஜித்களின் குறைகளைக் கேட்டறிந்து, அதற்குரிய தீர்வைப் பெற்றுக் கொடுத்தமைக்கான ஆதாரங்களையும் இத்தேடலில் காண முடியவில்லை.

ஆய்வுப் பிரதேசத்தில் மொத்தமாக 51 மஸ்ஜிதுகள் இயங்குகின்றன. அவற்றில் 35 மஸ்ஜிதுகள் மாத்திரமே முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதமான மஸ்ஜிதுகளை பதிவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட நிருவாகிகளுக்கு பள்ளிவாசல் குழு ஆலோசனை கூறியதை அவதானிக்க முடிந்தது. இருப்பினும் பதிவு செய்யப்படாத மஸ்ஜித்களோடு தொடர்பு கொண்டு அதனை முன்னின்று பதிவு செய்வதற்கான காத்திரமான நடவடிக்கைகளை இக்குழு மேற்கொண்டதா என்பதை தேடிய போது அதற்கான விடையைக் காணமுடியவில்லை.

மஸ்ஜித் நிருவாகிகளுக்கு இக்குழு கட்டளைகள் பிறப்பிப்பதை ஆய்வில் அவதானித்த போதிலும் அவற்றைப் பின்தொடர்வதிலும் முகாமைத்துவம் செய்வதிலும் இக்குழு பெற்ற வெற்றிக்கான சான்றுகளைக் கண்டறிய முடியவில்லை. இத்தகைய நிலைப்பாட்டினால் மஸ்ஜித் நிருவாகிகள் இக்குழுவின் வேண்டுகோள்களுக்கு செயல்வடிவம் கொடுக்காமல் இருந்து வருகின்றமையை நேர்காணலின் மூலம் அறிய முடிந்தது.

இதனால் நிருவாகிகளுக்கும் இக்குழுவிற்குமிடையில் சுமூகமான போக்குக் காணப்படவில்லை. அதனால் நிருவாகிகள் தாம் நினைக்கின்றவற்றை பள்ளிவாசல் குழுவின் ஆலோசனைகள் பெறப்படாமலேயே நிறைவேற்றுவதை எமது ஆய்வினூடாக அறிய முடிந்தது.

மேலும் மஸ்ஜித் விடயங்களைப் பற்றி நிருவாகிகளுடன் கலந்துரையாடுவதற்கான ஏற்பாட்டை பள்ளிவாசல் குழு மேற்கொண்டால் பங்குபற்றும் மஸ்ஜித் நிருவாகிகளின் எண்ணிக்கை ஆரோக்கியமாக அமைந்ததா என்பதற்கான எவ்வித சான்றையும் பெறமுடியவில்லை.

ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் நிரந்தர வருமானம் அற்ற ஒரு நிறுவனம் என்ற அடிப்படையில் தனவந்தர்களின் பங்களிப்புடன் இயங்கிவருகின்றது. பள்ளிவாசல்களுக்கு வருகின்ற மாதாந்த சந்தாவில் ஒரு குறிப்பிட்ட தொகையை சம்மேளனத்திற்கு வழங்க வேண்டும் எனவும் நிருவாகிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் அனைத்துப் பள்ளிவாசல்களும் தமது பூரண சம்மதத்தை சம்மேளனத்துக்கு வழங்கவில்லை. இவ்வாறான விடயங்களை சம்மேளனம் நிருவாகிகளிடமிருந்து எதிர்பார்ப்பதானது இரு சாராருக்குமிடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மஸ்ஜிதுகள் என்பது சமூகத்தின் மத்திய நிலையம் என்ற அடிப்படையில் சிறந்த மார்க்க அறிஞர்களை இமாம்களாக தேர்ந்தெடுப்பது தலைமைகளின் கடப்பாடாகும். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதானது மஸ்ஜிதுகள் மற்றும் சமூகம் நன்மை அடையக் காரணமாக அமைகின்றது. ஆனால் மஸ்ஜிதுகளுக்குரிய இமாம்கள் மற்றும் முஅத்தின்களை தெரிவு செய்வதற்கான சிறந்த உபாயம் பள்ளிவாசல் குழுவிடம் இருப்பதற்கான எந்தப் பதிவுகளையும் இனங்கண்டுகொள்ள முடியவில்லை. இதனால் திறமையற்ற இமாம்கள் உள்ளீர்க்கப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அமைந்திருப்பதையும் எமது ஆய்வினூடாக அவதானிக்க முடிந்தது.

பள்ளிவாசல் நிருவாகிகள் தாம் விரும்புபவரை இமாமாக இணைப்புச் செய்வதும் விருப்பமற்றுப் போகும் போது இடைவிலக்குவதுமான சம்பவங்கள் இங்குள்ள மஸ்ஜிதுகளில் இடம்பெற்றுள்ளதை இவ்வாய்வில் கண்டறிய முடிந்தது. தொழில் உத்தரவாதத்தை வழங்காத இச்செயன்முறை இறுதியில் பள்ளிவாசல்களின் முன்னேற்றத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் இமாம்கள் மற்றும் முஅத்தின்கள் பாரிய சவால்களை எதிர்கொள்வதை ஏற்கனவே எமது ஆய்வு ஒன்றில் வெளிப்படுத்தியிருந்தோம். (முஹம்மட்

ஹில்பான். எம்.எல்., மஸாஹிர். எஸ்.எம்.எம். 2020). குறிப்பாக அவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கப்படாமை, குறைவான சம்பளம், விடுமுறையின்மை, ஓய்வூதியத் திட்டமின்மை, திடீர் இடை விலக்கல், பள்ளிவாயல்களில் வசதி வாய்ப்பின்மை போன்றன அவைகளாகும்.

இப்பிரச்சினைக்கான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளன பள்ளிவாசல் குழு கடமைப்பட்டுள்ள போதிலும் இதுவரை பள்ளிவாசல் குழு இவைகளுக்கான தீர்வுகளை முறையாகப் பெற்றுக் கொடுத்துள்ளதா என்பதற்கு போதிய சான்றாதாரங்கள் இத்தேடலில் கிடைக்கவில்லை. இதனால் பள்ளிவாசல்களின் முன்னேற்றத்தில் பங்காளர்களாக இருக்கின்ற இமாம்கள் மற்றும் முஅத்தின்கள் மனதளவில் பாதிப்படைந்து, வெறுமனே தொழிலுக்காகச் சேவையாற்றுவதைக் காணமுடிகின்றது. இவர்களின் நலன் பேணப்படும் போது பள்ளிவாசல்களின் முன்னேற்றத்தில் இவர்களின் பங்களிப்பு அபரிமிதமாக அமையவல்லது.

மஸ்ஜிதினூடாக கல்வி கற்பதற்குரிய சூழலை உருவாக்கிக் கொடுத்தல், வட்டியற்ற கடனை வழங்குவதற்குரிய ஏற்பாட்டை செய்து கொடுத்தல், ஸகாத் அறவிடலையும் விநியோகத்தையும் முகாமை செய்தல், தனிமனிதர்களுக்கிடையேயும் குழுக்களுக்கிடையேயும் சமரசத்தை ஏற்படுத்தல் போன்ற சமூக நலத்திட்டங்களை வழங்கும் அளவுக்கு இங்குள்ள மஸ்ஜிதுகள் (பள்ளிவாசல் குழுவினூடாக) மாற்றியமைக்கப்பட்டுள்ளதா என்பதை எமது ஆய்வினூடாகக் காண முடியவில்லை.

நிருவாகிகளுக்கான ஒன்று கூடலை பள்ளிவாசல் குழு ஏற்பாடு செய்து, சில முக்கிய விடயங்களை பகிர்ந்து கொண்டுள்ளது. குறிப்பாக நிருவாகிகள் பொதுமக்களுடன் ஒழுக்கத்துடன் நடத்தல், மாதாந்த சந்தா விபரத்தை மக்களுக்கு காட்சிப்படுத்தல், நிருவாக எல்லைக்குள் இடம்பெறும் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தல், இமாம்கள், முஅத்தின்களின் சம்பளப் பிரச்சினையை தீர்த்து வைத்தல், விடுமுறை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை செய்தல் போன்ற விடயங்களில் நிருவாகம் சிறப்பாக இயங்க வேண்டும் என பொதுவாக வேண்டிக் கொள்ளப்பட்டது. வேண்டிக்கொள்ளப்பட்ட விடயங்கள் மஸ்ஜித்களின் நிருவாகிகளால் நிறைவேற்றப்பட்டதாக அறியமுடியவில்லை. அதனை பள்ளிவாசல் குழு மேற்பார்வை செய்ததாகவும் தெரியவில்லை.

மஸ்ஜிதுகளின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டிய இவ்வமைப்பு, தமது பகுதி மஸ்ஜிதுகளின் குறைபாடுகளை அடையாளங்கண்டு, அவற்றை சம்பந்தப்பட்ட அமைப்புக்களுக்குத் தெரியப்படுத்தி, அவற்றை நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை செய்வதிலும் முன்னின்று உழைத்ததற்கான பதிவுகளையும் அறியமுடியவில்லை. மேலும் இவ்விடயங்களில் உயர் நிறுவனங்களும் தமது அவதானத்தை செலுத்தியதற்கான சான்றுகளையும் அடையாளம் காணமுடியவில்லை.

ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவன பள்ளிவாசல் குழு, சில ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. குறிப்பாக ஆய்வுப் பிரதேசத்தில் இஸ்லாத்திற்கு முரணாக அமைகின்ற சில விடயங்களை இல்லாதொழிக்கும் முயற்சியில் அது உழைத்துள்ளது. குறிப்பாக ஏறாவூர் பிரதான வீதியில் அதிஸ்ட இலாபச் சீட்டுக்களை விற்பனை செய்பவர்களாக முஸ்லிம் வர்த்தகர்கள் சிலர் காணப்படுகிறார்கள். அத்தகைய வியாபாரிகளை இனங்கண்டு, அவர்களுக்கு இத்தொழில் பற்றிய இஸ்லாமியப் பார்வையை பூரணமாகத் தெளிவுபடுத்தி, மாற்றுத் தொழில் ஒன்றை மேற்கொள்ளுமாறு ஆலோசனை கூறியுள்ளது. சுமார் ஐந்து தடவைகள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக சந்தித்து முயற்சித்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை. இறுதியில் வர்த்தகச் சட்டத்தின் கீழ் அதிஸ்ட இலாபச் சீட்டு அதிகார சபையினால் இவ்வியாபாரத்தை தடுக்க முயற்சித்தமைக்காக பள்ளிவாசல் குழு உறுப்பினர்கள் எச்சரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

முஸ்லிம்களின் முக்கிய நிகழ்வுகள் இடம்பெறும் காலங்களில் மாத்திரம் ஜும்ஆ பயான்களுக்கான தலைப்புக்களை வழங்கி, குத்பா பிரசங்கங்களை மேற்கொள்வதிலும் இக்குழு வெற்றி கண்டுள்ளது. ஏனைய காலங்களில் இக்குழு தலைப்புக்களை வழங்கியதாகத் தெரியவில்லை. மேலும் ஐந்தைந்து பள்ளிவாசல்களை ஒன்றிணைத்து ஒரு வலயமாக மாற்றியமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் அது வெற்றியளித்தமைக்கான எந்த ஆதாரங்களும் கிடைக்கவில்லை.

## 4. முடிவுரையும் பரிந்துரைகளும்

ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பள்ளிவாசல் குழுவின் செயற்பாடுகள் முழுமையடையாமையானதும் இக்குழுவுக்கும் மஸ்ஜித் நிருவாகிகளுக்குமிடையிலான உறவு சிறப்பாக இன்மையும் மஸ்ஜிதுகளின் முன்னேற்றத்தில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. மஸ்ஜிதுகள் பௌதீக ரீதியாகவும் ஆளணி ரீதியாகவும் அபிவிருத்தி அடையவில்லை. இதனால் சம்மேளனம் இல்லாத சந்தர்ப்பத்தில் எவ்வாறு மஸ்ஜிதுகள் இயங்கியதோ அதேபோன்றே இன்னும் இயங்குகின்றது. இதனால் சமூகம் அடைய எதிர்பார்த்துள்ள கல்வி, பொருளாதாரம், சமூக ரீதியான முன்னேற்றங்கள் அடையப் பெறவில்லை. வேற்றுமைகளை மறந்து, பள்ளிவாசல் நிருவாகங்கள் பள்ளிவாசல் குழுவுடன் இணைந்து பயணிக்கும் போது சிறந்த உட்கட்டமைப்பு, ஆளணி அபிவிருத்திகளை ஏற்படுத்தி, முன்மாதிரிமிக்க மஸ்ஜிதுகளாக ஏறாவூர் மஸ்ஜிதுகளை மாற்றியமைக்க முடியும். மேலும் இவ்வாய்வு மஸ்ஜிதுகளை மேம்படுத்துவதற்கு முனையும் சமூக ஆர்வலர்களுக்கும், பொது அமைப்புக்களுக்கும் துணையாக அமையவல்லது.

பள்ளிவாசல் குழு மஸ்ஜிதுகளை முன்னேற்றுவதற்கான வருடாந்த திட்டத்தை உறுப்பினர்களுக்கு மத்தியில் முறையாக கலந்துரையாடி வடிவமைப்பதோடு, வருடாந்த திட்டத்திலிருந்து கட்டங்கட்டமாக மேற்கொள்ள வேண்டிய அம்சங்களை பிரித்தெடுத்து, செயற்திட்டத்தை உருவாக்கி அமுல்படுத்துவது சிறப்பானதாகும். பள்ளிவாசல் குழு உறுப்பினர்கள் தங்களுக்கிடையிலான சந்திப்பு மற்றும் மஸ்ஜிதுகளை முன்னேற்றுவதற்கான செயற்பாட்டில் முழுமையாக பங்குபற்றுவதோடு, மஸ்ஜித் நிருவாகிகளுடன் இணைந்து செயற்படுவதற்கான வழிவகைகளையும் கையாள்வது ஆரோக்கியமாக அமையவல்லது.

பதிவு செய்யப்படாத மஸ்ஜிதுகளை பதிவு செய்ய நடவடிக்கை எடுத்தல், இமாம்கள் மற்றும் முஅத்தின்களை தெரிவு செய்வதற்கான வழிமுறை ஒன்றைப் பிரேரித்தல், இமாம்கள் மற்றும் முஅத்தின்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தீர்த்து வைத்தல், ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம் தனக்கென்று நிலையான வருமானம் தரக்கூடிய வருமான வழியொன்றை ஏற்பாடு செய்தல், மஸ்ஜிதுகளுக்கு கள விஜயம் செய்து குறைகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்தல், மஸ்ஜிதுகளுக்கெல்லாம் தலைமை நிறுவனமாக செயற்படுவதற்குரிய தலைமையைப் பெற்று, அதன்படி செயற்படல் போன்ற விடயங்களை மிகவும் அவதானமாகவும் கச்சிதமாகவும் மேற்கொள்ளும் போது இந்நிறுவனத்தின் இலக்கு புத்தாக்கம் பெறுவது திண்ணமாகும்.

பள்ளிவாசல்களும் சம்மேளனமும் அரசசார்பற்ற அமைப்பு என்பதனால் பொறுப்புக் கூறலிலும் கட்டுப்படுத்தலிலும் பலவீனம் காணப்படுகின்றது. பள்ளிவாசல் குழு செயலாளர் மற்றும் மஸ்ஜிதுகளின் செயலாளர்களுக்கு மாதாந்த வேதனத்தை வழங்குவதனூடாக பொறுப்புள்ளவர்களாக மாற்றுவதன் மூலம் சுமுகமான செயற்பாட்டிற்கு வித்திடலாம்.

## உசாத்துணைகள்

ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம். (2019). *ஏறாவூரில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல்கள்.* ஏறாவூர்: ஏறாவூர் பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

தர்ஜுமதுல் குர்ஆன் தமிழ் மொழி பெயர்ப்பு. (2015). பறகஹதெனிய, இலங்கை: ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா.

பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் பள்ளிவாயல்கள், அறபுக் கல்லூரிகள், குர்ஆன் (தஹம்) பாடசாலை, மத நிறுவனங்கள். (2019). கொழும்பு: முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.

புனித ஸஹீஹுல் புஹாரி. (2020). [Online] available: http: www.tamililquran.com

நௌஸாத் ஏ.எஸ்.எம். (2017). *ஊரை இஸ்லாமியமயப்படுத்துவதில் மஸ்ஜிதின் பங்களிப்பு, பயணம்,* (இதழ் : 50 மார்ச் - 2017), கொழும்பு: ஸலாமாஹ் பப்ளிகேசன்.

மஸாஹிர், எஸ்.எம்.எம். (2015). *இலங்கையில் மஸ்ஜிதுகளினூடாக மக்களுக்குக் கல்வியூட்டல் - மலேசிய மஸ்ஜிதுகளை மாதிரியாகக் கொண்ட ஆய்வு,* களம் Journal, Vol IX.(1), கலை கலாசார பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

முஹம்மட் ஹில்பான். எம்.எல்., மஸாஹிர். எஸ்.எம்.எம். (2020). *மஸ்ஜித்களில் கடமையாற்றும் இமாம்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்:* ஏறாவூர் பிரதேசத்தை மையப்படுத்திய ஒரு கள ஆய்வு, ஒன்பதாவது சர்வதேச ஆய்வரங்கு, கலை, கலாசாரப் பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்.

ஜாவித், ஏ.எஸ்.எம். (2018). *மஸ்ஜிதுகளின் எதிர்கால சிறப்பான செயற்பாட்டுக்கு வழிகோலிய விருது,* [Online] available: http: www.vaaramanjari.lk [accessed]: 2020.09.05.

ஜெம்சித் அஸீஸ். (2018). *மஸ்ஜித் மைய சமூக மேன்பாடு,* [Online] available: http: www.sonakar.com [accessed]: 2020.09.05.

**நேர்காணல்கள்**

அப்துர் ரஹ்மான். (2020.09.07). தலைவர், ஹைராத் மஸ்ஜித், ஏறாவூர்.

அஜ்வத், ஐ.ஏ. (2020.09.05). செயலாளர், ஆற்றங்கரை ஜும்ஆ மஸ்ஜித், ஏறாவூர்.

அஸீம். (2020.09.07). செயலாளர், சுஹதா மஸ்ஜித், ஏறாவூர்.

கலந்தர் சிக்கந்தர். (2020.09.05). ஹிழ்று மஸ்ஜித், ஏறாவூர்.

கஸ்ஸாலி ஸாகிப், டி.எம். (2020.08.29). உறுப்பினர், பள்ளிவாயல் குழு - ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

கபூர், எம்.எச். (2020.09.07). தலைவர் ஜாமிஉல் அக்பர் ஜும்ஆ மஸ்ஜித், ஏறாவூர்.

சப்றாஸ், ஏ.சி.எம். (2020.09.05). பொருளாளர், ஹுதா மஸ்ஜித், ஏறாவூர்.

சப்ரி, ஏ.ஆர்.எம். (2020.08.29). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

சக்கூர். (2020.09.04). செயலாளர், முகைதீன் ஜும்ஆ மஸ்ஜித், ஏறாவூர்.

தஸ்தகீர், எம். (2020.08.29). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

பதுர்தீன், ஏ.எல். (2020.08.29). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

றபியுதீன், எம்.ஜே. (2020.08.29). தலைவர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

றபீக், ஏ.எல்.எம். (2020.08.30). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

றஸாக், ஏ.எம்.ஏ. (2020.08.30). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

நளீம், எஸ்,ஏ.எம். (2020.08.30). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

நளீம், எம்.எஸ். (2020.09.05). தலைவர், ஸாவியா மஸ்ஜித், ஏறாவூர்

நளீம், எஸ்.எல்.எம். (2020.08.30). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

நிராஸ், எம்.எஸ்.எம். (2020.08.30). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

மன்சூர், என்.எல்.எம். (2020.09.04). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

மஜீத், ஏ.சி.ஏ. (2020.09.04). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

லதீப், ஏம்.ஏ.சீ.ஏ. (2020.09.04). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

லதீப், எம்.எல். (2020.09.05). தலைவர், நூருஸ்ஸலாம் மஸ்ஜித், ஏறாவூர்.

ஹாமிம், எம்.எஸ்.எம். (2020.09.04). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

ஹில்மி. (2020.09.04). தலைவர், மர்கசுல் இஸ்லாமி, ஏறாவூர்.

ஹுஸைன், எம்.ஏ.எம். (2020.09.04). பொருளாளர், ஹுஸைன் மஸ்ஜித், ஏறாவூர்.

ஜ.ஃபர். (2020.09.05). செயலாளர், அக்பர் ஜும்ஆ மஸ்ஜித், ஏறாவூர்.

ஜுனைட், எஸ். (2020.09.04). உறுப்பினர், பள்ளிவாயல் குழு – ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

ஜெயினுதீன், யூ.எல். (2020.09.07). தலைவர், மிஸ்பாஹ் மஸ்ஜித், ஏறாவூர்.

ஸாஹுல் ஹமீட். (2020.08.30). தலைவர், ஹஸனாத் மஸ்ஜித், ஏறாவூர்.

ஸபூர்தீன். (2020.09.05). பறஹா மஸ்ஜித், ஏறாவூர்.